# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

கன்னியாகுமரி மாவட்டப்பிரிவு

**விளையாட்டு பள்ளி / விடுதி**

2012– 2013 ம் வருடம் முதல் கன்னியாகுமரி மாவட்டத்தில் விளையாட்டு பள்ளி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று கொண்டிருக்கிறது. இதில் 60 மாணவிகள் தங்கி படித்து வருகிறார்கள். நாளொன்றுக்கு ஒரு மாணவிக்கு உணவு செலவினமாக ரூ.75/– வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவிகளுக்கும் கல்வி, தங்கும் இடம், விளையாட்டு சீருடைகள், ஊட்டசத்து நிறைந்த உணவுகள், விளையாட்டு பயிற்சி ஆகியவை இலவசமாக வழங்கப்படுகிறது

**மண்டல அளவிலான உலக திறனாளர்கள் திட்டம்**

உலக திறனாளர்களை கண்டறியும் மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு முதலிடம் பெற்ற வீரர்கள் மண்டல அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்துக் கொள்வார்கள். மண்டல அளவில் நடைபெறும் போட்டிகளில் முதல் 10 இடங்களில் வெற்றி பெறும் வீரர்களுக்கு ரூ.500/– வீதம் 12 மாதங்களுக்கு வழங்கப்படும். இதில் முதற்கட்டமாக கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த 124 மாணவ / மாணவிகளுக்கு ரூ.3000/– வீதம் ஊக்க உதவித் தொகை வழங்கப்பட்டது.

**பைக்கா**

மத்திய அரசால் நடத்தப்படும் 16 வயதுக்குட்பட்ட மாணவ / மாணவியர்கள் கலந்துக் கொள்ளும் பைக்கா விளையாட்டானது, முதலில் ஒன்றிய அளவில் நடைபெறும். ஒன்றிய அளவில் நடைபெறும் போட்டியில் வெற்றிப் பெறும் மாணவ / மாணவியர்கள் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் பங்கு பெறுவார்கள். மாவட்ட அளவில் முதலிடம் பெறுபவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் பங்கு பெறுவார்கள். மாநில அளவில் வெற்றி பெறும் மாணவ / மாணவியர்கள் தேசிய அளவில் நடைபெறும் போட்டியில் கலந்துக் கொள்வார்கள். இந்த வருடம் கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த 3 மாணவர்கள் மற்றும் 1 மாணவி ஆகிய 4 பேர் தேசிய போட்டிகளில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். நபர் ஒன்றுக்கு சுமார் 6 ஆயிரம் மதிப்பீட்டில் விளையாட்டு சீருடைகள் வழங்கப்படுகிறது.

**தேசிய அளவிலான பள்ளி / கல்லூரிகளுக்கிடேயான போட்டிகள்**

தேசிய அளவிலான பள்ளிகளுக்கிடேயான போட்டிகளில் வெற்றிப் பெறும் மாணவ மாணவிகளுக்கு ரூ. 10000/– , கல்லூரிகளுக்கிடையே மாணவ / மாணவிகளுக்கிடையே நடைபெறும் போட்டிகளில் வெற்றிப் பெறும் மாணவ / மாணவிகளுக்கு ரூ. 13000/– ஊக்க உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இந்த வருடம் கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த 5 வீரர் / வீராங்கணைகள் இதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

**<u>முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள்</u>**

கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த கால்பந்து விளையாட்டு வீரர்கள் மாநில அளவில் நடைபெற்ற கால்பந்து போட்டியில் முதலிடம் பெற்று தலா ரூ. 1 இலட்சம் வீதம் 16 நபர்கள் ரூ. 16 இலட்சம் பெற்றுக் கொண்டனர். தடகளப் போட்டியில் ஒரு வீராங்கனை முதலிடத்தை பெற்று ரூ. 1,00,000/– ம், ஒரு வீரர் மற்றும் ஒரு வீராங்கனை இரண்டாம் இடம் பெற்று தலா ரூ.75,000/– வீதம் ரூ.1,50,000/–ம், நீச்சல் போட்டியில் ஒரு வீரர் மூன்றாம் இடம் பெற்று ரூ.25000/– பெற்றுக் கொண்டார்கள். மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த பூப்பந்து விளையாட்டு வீரர்கள் மாநில அளவில் இரண்டாம் இடத்தை பெற்று தலா ரூ.7500/– வீதம் 7 நபர்கள் ரூ.52500/–ம் பெற்றுக் கொண்டனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.